# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : STC No.25/2024 Date: 07.11.2025
Deposition of Witness for : பு.சா.1
Name : முருகன்

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**குறுக்கு விசாரணை** :-

1) நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை சுமார் 10-15 வருடங்களாக தெரியும். நான் வட்டி தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. நான் விவசாயத்தின் மூலம் வருமானம் பெற்று வருவதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரியை தவிர மற்ற நபர்களுக்கு பணம் வட்டிக்கு தந்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தவிர வேறு காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது ஓட்டுநர்மீது ரூ.1 லட்சம் தொகைக்கு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) எதிரிக்கு கடன் கொடுத்ததற்கு ஏதேனும் ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் இல்லை, பழக்கத்தின் அடிப்படையில் கொடுத்தேன், எதிரி மகளின் திருமணத்திற்காக என்னிடம் கடன் வாங்கினார். எதிரி மகளின் திருமண தேதி தெரியுமா என்றால் தேதி தெரியாது, என்னிடம் பணம் பெற்று ஒரு மாதத்தில் திருமணம் நடந்தது. எதிரி மகளின் திருமணத்திற்கு பின்னிட்டு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம்.

3) நான் வட்டிக்கு பணம் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை பிணையமாக தான் எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி காசோலை கொடுத்தபோது உடன் யாராவது இருந்தார்களா என்றால் இல்லை. எதிரி கடனுக்கு ஆதரவாக வழக்கு காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி வழக்கு காசோலையை பூர்த்தி செய்யாத கையொப்பம் மட்டும் செய்த காசோலை தான் கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி மகளின் திருமணத்திற்கு எனக்கு அழைப்பிதழ் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிரியின் மகளின் திருமணத்திற்கு கடன் வாங்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

4) எதிரி எனது வங்கி கணக்கில் தலா ரூ.5,000/-ம் தொகையை 04 முறை செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல, இரண்டு முறை ரூ.5,000/-ம் தொகையை செலுத்தியுள்ளார். மேற்படி, தொகையை நான் கடனில் கழித்தேனா அல்லது வட்டி தொகையில் கழித்தேனா என்றால் எதுவும் செய்யவில்லை. நானும், எதிரியும் சேர்ந்து ஒரு டீ கடை நடத்தி வந்தோம் என்றால் சரியல்ல. நானும், எதிரியும் சேர்ந்து வாடகை ஒப்பந்த பத்திரம் போட்டுள்ளோம் என்றும், அதற்கு சாட்சியாக ராஜாவும், லட்சுமியும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் வழக்கு காசோலையை எதிரி என்னிடம் பிணையமாக கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல.

5) எனது ஆண்டு வருமானம் ரூ.4,00,000/-ம் இருக்கும். அதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது, விவசாய வருமானத்திற்கு ஆவணங்கள் பொதுவாக இருக்காது. நான் சொல்வது பொய் என்றும், நான் வட்டிக்கு தொழில் செய்து வருகிறேன் என்றும், வழக்கிற்காக விவசாய வருமானத்தை

எதிரிக்கு கொடுத்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இதேபோல், கடன் சர்ச்சை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்தவொரு ஆவணமும் இல்லாமல் எதிரிக்கு ரூ.6 லட்சம் கடன் கொடுத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுத்த தேதியை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

6) எதிரி எந்த தேதியில் வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார் என்பதை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எந்த வங்கி காசோலையை கொடுத்தார் என்றால் சிட்டி யூனியன் வங்கி காசோலையை கொடுத்தார். எதிரிக்கு எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் 28-08-2023 ம் தேதியன்று எதிரி கடன் கேட்டு அன்றைய தினமே பணம் ஏற்பாடு செய்து கடன் கொடுத்தேன். நான் உண்மையிலேயே, பணம் கொடுத்திருந்தால் பிரமாண வாக்குமூலத்தில் மேற்சொன்னவற்றை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

7) எதிரிக்கு பணம் தேவை இருந்தது என்று எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எதிரி திருமணத்திற்காக பணம் தேவைப்படுவதாக கடன் கேட்பதற்கு முன்பே சொல்லியிருந்தார், அதனால் தான் நான் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் பணம் பெற்று எதிரிக்கு கொடுத்தேன். எனது ஆண்டு வருமானம் ரூ.4,00,000/-ம் என்று சொல்லும்போது, ஒரே நாளில் ரூ.6,00,000/-ம் தொகையை எதிரிக்கு கொடுத்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுத்த விவரம் எனது தந்தைக்கு தெரியுமா என்றால் தெரியும், எதிரியை யார் என்று எனது தந்தைக்கு தெரியாது.

8) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரி எனது வங்கி கணக்கிற்கு தொகை எதுவும் அனுப்பியுள்ளாரா என்றால் இல்லை, எதிரியின் மனைவி வங்கி கணக்கில் இருந்து ரூ.1000/-ம், ரூ.2000/-ம் தொகையை எதிரியின் தந்தையிடம் கொடுக்குமாறு செலுத்துவார். எதிரியின் தந்தை எனது வீட்டின் அருகே வசித்து வருகிறார். எதிரியின் மகன் வங்கி கணக்கில் இருந்தும் பணம் அனுப்புவார். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு பிடியாணை பிறப்பிக்கப்பட்டதால் இரண்டுமுறை ரூ.5000/-ம் அனுப்பியுள்ளார்.

9) எதிரி எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்ற விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடாமல் பிணையமாக கொடுத்த காசோலையை மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் மகளின் திருமண தேதி தெரியாமல் திருமணம் நடப்பது மட்டும் எதிரியின் தந்தை அருகில் வசிப்பதால் அவரின் மூலம் நான் திருமணத்தை மட்டும் தெரிந்துகொண்டு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து, பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியும், நானும் டீ கடை வைத்து நடத்தினோம் என்றும், அதற்கு ஆதரவாக பிணையமாக கொடுத்த வழக்கு காசோலையை மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) நானும், எதிரியும் நடத்தி வந்த டீ கடை நஷ்டம் ஆனதால் அதில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காகவும், எதிரியை ஏமாற்றும் நோக்கத்தில் புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் பொய்யான சங்கதிகளை கூறி சட்டத்திற்கு புறம்பாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி காசோலையை பிணைத்திற்காக மட்டுமே கொடுத்தார் என்றும், அதனை மோசடியாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-Murugan

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.